**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மதுராந்தகம்**

**முன்னிலை : திருமதி. N.வள்ளியம்மா, B.Sc., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, மதுராந்தகம்**

**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 798/2026**

A3–நாகராஜ், வயது.41, த/பெ.தேவநாதன்,
எண்.12, கங்கையம்மன் கோயில் தெரு,
படாளம், செங்கல்பட்டு மாவட்டம். ...மனுதாரர்/எதிரி

// எதிரி//

காவல் நிலைய அதிகாரி அவர்கள்,
ஜி1 மதுராந்தகம் காவல் நிலையம்,
Cr. No.285/2026,
U/s. 305(a), 331 of BNS ...எதிர்மனுதார்

******

இந்த மனுவானது 10.07.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று 21.07.2026 என்முன் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.புருசோத்தமன், திருமதி.M.கௌசல்யா அவர்கள் ஆஜராகியும் அரசு தரப்பில் திருமதி.M.நித்யா குற்றவியல் அரசு வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகி இருதரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும். இன்று 21.07.2026 இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கிடும்.

**உத்தரவு**

**01)** மனுதாரர்/எதிரி மதுராந்தகம் காவல் நிலைய Cr. No.285/2026, U/s. 305(a), 331 of BNS வழக்கில் 09.07.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அவரை பிணையில் விடுவிக்கக்கோரி BNSS பிரிவு 480 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரை இந்த வழக்கில் தவறாக எதிரியாக சேர்த்து உள்ளார்கள். மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மனுதாரர்

வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிப்பதாகவும் நீதிமன்றம் விதிக்கும் எந்த விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படுவதாகவும் மனுதாரரை பிணையில் விடவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டது.

**02).** மனுவின் பேரில் அரசுத் தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு பெறப்பட்ட பதில் அறிவிப்பில் கடந்த 16.06.2026ம் தேதி 15.30 மணிக்கு வழக்கின் வாதி கருணாகரன் த/பெ.கணேசன் என்பவர் காவல் நிலையம் ஆஜராகி தான் 14.06.2026ம் தேதி மதியம் 12.00 மணியளவில் தன் வீட்டை பூட்டிவிட்டு உத்திரமேரூர் அருகே உள்ள புலியூர் கிராமத்தில் உள்ள தனது மாமியார் வீட்டிற்க சென்றிருந்த போது, 16.06.2026ம் தேதி காலை தன் வீட்டின் தகவு திறந்து இருப்பதாக அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தகவல் தெரிவித்ததாகவும், தான் வந்து தனது வீட்டை பார்த்த போது தனது வீட்டின் முன்ப்கக ஜன்னலை உடைத்து யாரோ உள்ளே நுழைந்து அலமாரியில் வைத்திருந்த பீரோ சாவியை எடுத்து பீரோவை திறந்து அதில் வைத்திருந்த 10 சவரன் தங்க நகைகள் மற்றும் ½ கிலோ மதிப்புள்ள வெள்ளி பொருட்களை திருடி சென்றுள்ளதாக கொடுத்த புகாரை பெற்று பார்வையில் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் இந்த எதிரி அவரது கூட்டாளிகளான சதிஷ் த/பெ.கந்தன் மற்றும் சிவராமன் த/பெ.மோகன் ஆகியோர்களின் உதவியுடன் 16.06.2026ம் தேதி இரவு கருங்குழியில் உள்ள வாதிக்கு சொந்தமான வீட்டில் பீரோவில் இருந்த தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை திருடி சென்றதாக எதிரி சதீஷ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எதிரிகளை 09.07.2026ம் தேதி 16.30 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மேலும் இவ்வழக்கின் புலன்விசாரணை முடிவடையாததாலும், மேலும் இதுபோன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும் வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் தலைமறைவாகிவிடுவார் என்பதாலும், எனவே எதிரியை ஜாமீனில் விட மிக கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதாக பதில் பெறப்பட்டது.

**03).** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**04).** எதிரிக்கு எதிராக U/s. 305(a), 331 of BNS ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் புலன் விசாரணையானது தற்போது வரை நிலுவையில் இருந்து வருவதால், இந்த எதிரியை தற்போது பிணையில் விடுவித்தால் அது வழக்கு விசாரணையை பாதிக்கக்கூடும்.

**05).** மேலும் எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் எதிரி சாட்சிகளை மிரட்டுவார் என்றும், மேலும் இந்த வழக்கின் புகார்தாரரான கருணாகரன் த/பெ.கணேசன் என்பவரின் நகைகள் இதுவரை மீட்கபடாததாலும், எதிரி மீண்டும் இதே குற்ற சம்பவங்களில் ஈடுபடுவார் என்றும், எதிரியை பிணையில் விட அரசு தரப்பில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனை ஏற்கும் வகையில் உள்ளது. வழக்கின் விசாரணை தற்போது வரை நிலுவையில் உள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யபடுகிறது.

**இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் கூறப்பட்டு சுருக்கெழுத்து தட்டச்சரால் கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 21ம் நாள் செவ்வாய்க்கிழமையன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Judicial Magistrate No.1

VALLIAMMA Digitally signed by VALLIAMMA
Location: Madurantakam
Date: 2026.07.21 11:10:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மதுராந்தகம்.